# பதுளை மாவட்ட அப்புத்தளைப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு

**Supervisor**
*Mr. N. Subaraj,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. J. Lingeswary,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் கோப்பித்தோட்டங்களும், தேயிலைத்தோட்டங்களும் அமைக்கப்பட்ட போது அத்தோட்டங்களில் கூலித்தொழில் செய்வதற்கு இந்தியாவில் இருந்து கூலித்தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். திராவிட இனத்தைச் சேர்ந்த இம்மக்கள் மலையகப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டமையால் மலையக மக்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாவர். இவர்கள் தாம் குடிபுகுந்த நாட்டில் மதநம்பிக்கைகள், மதச்சடங்குகள் என்பவற்றினை பேணி வந்தனர்.

மலையக மக்கள் வாழ்வில் சமயம் பின்னிப்பிணைந்துள்ளது. ஊவா மாகாணத்தில் உள்ள அப்புத்தளைப் பிரதேசம் மலையக மக்கள் செறிந்து வாழும் இடமாகும். இப்பிரதேசம் ஆய்வின் எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்துமத சிறுதெய்வ வழிபாடு அப்புத்தளையில் மிகவும் பிரபல்யம் அடைந்ததொன்றாகும். இவ்வழிபாடு இம்மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவ்வடிப்படையில் அப்புத்தளைப் பிரதேச சிறுதெய்வ வழிபாடு பற்றியும் அவ்வழிபாடு மக்களின் வாழ்வில் எத்துணையளவு தாக்கம் செலுத்தி வருகின்றது என்பதனையும் இவ்வாய்வு அலசுகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. மலையகப் பிரதேசமான அப்புத்தளைப் பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படும் சிறுதெய்வ வழிபாடானது, சமூகக் கட்டமைப்பில் எந்தளவு பங்களிப்பு செய்கிறது என்பதனை இனங்காணல்.
2. அப்புத்தளைப் பிரதேசத்திலுள்ள சிறுதெய்வ வழிபாடுகளின் தொன்மையையும் தனித்துவங்களையும் அடையாளப்படுத்தல்.
3. அப்புத்தளைப் பிரதேச மக்களின் சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக நிலவும் வாய்மொழிக் கதைகளில் உள்ள வரலாற்று மூலங்களை இனங்காணல்.
4. சிறுதெய்வ வழிபாட்டிற்கும், இப்பிரதேச சமூக வரலாற்றுக்கும் இடையிலான ஊட்டங்களை வெளிக்கொணர்தல்.

சமூகத்தில் மக்களின் தகுதி நிலைகள் விலக்கப்படுவதோடு சமூகத்தின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கு வழிகோலும் அம்சமாக சிறுதெய்வ வழிபாடு உள்ளதென்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டுள்ளது. அப்புத்தளைப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடானது தொன்மையாகவும், தனித்துவமுள்ளதாகவும் அப்பிரதேச சமூக பண்பாடுகளில் பங்களிப்பு செய்வதாகவும் காணப்படுவதோடு சமூக முரண்பாடுகளை களையும் ஒரு நிகழ்வாகவும் உள்ளது. என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், விளக்கமுறை, வரலாற்றியல், கோட்பாட்டியல் போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்விற்காக முதலாம் தர மூலங்களாக, அப்புத்தளைப் பிரதேச இந்துமக்கள், பூசகர் ஆகியோரிடம் பெறப்பட்ட நேர்காணல், கள ஆய்வின் மூலம் பெறப்படும் தகவல்கள், அவதானமுறை மூலம்

பெறப்படும் தகவல்கள், மாதிரி எடுப்பின் மூலம் பெறப்பட்ட நபர்களினால் நிரப்பப்பட்ட வினாக்கொத்துக்களின் முடிவுகள் முதலியவை பயன்படுத்தப்படும். இரண்டாம் நிலைத் தரவுகளாக, சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், ஒலி,ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள், இணையத்தள குறிப்புகள் என்பன பயன்படுத்தப்படும்.

“பாமர மக்களால் ஆழமாக உணரப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்ற நம்பிக்கைகள் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு அழிக்கப்பட்டு வரும் சடங்குகளின் தொகுதியே சிறுதெய்வ வழிபாடு” என வரைவிலக்கணப்படுத்தலாம். சிறுதெய்வங்கள், தெய்வங்களைக் குறிக்கும் நம்பிக்கைகள், நம்பிக்கை வழிவந்த சடங்குகள் ஆகிய அம்சங்களைக் கொண்டதே சிறு தெய்வ வழிபாடாகும். பொதுவாக இந்தியாவின் பூர்வீகக் குடிகளான திராவிடர்களின் ஒரு வழிபாடாக இச்சிறுதெய்வ வழிபாடு கருதப்படுகின்றது.

சிறுதெய்வம் நாட்டுப்புறதெய்வம், கிராமியதெய்வம், காவல்தெய்வம், குலதெய்வம், திராவிடதெய்வம் என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. சிறுதெய்வ வழிபாடானது இந்துமத ஆகம வழிபாட்டிலிருந்து வேறுபட்டதொன்றாகும். இச்சிறுதெய்வ வழிபாடு இலங்கையின் மலையகப் பிரதேசத்தின் அப்புத்தளையில் அதிக செல்வாக்குப் பெற்றதொன்றாகும். பத்தினியம்மன், காளியம்மன், ஆத்துக்காளி, ஏழுகன்னிகள், மதுரைவீரன், மாடசாமி, முனி, ரோதைமுனி, கருப்பன்சாமி, செண்டாக்கட்டி, கவ்வாத்துச்சாமி, மலைச்சாமி, மின்னிடையான், வைரவர், இடும்பன் ஆகிய தெய்வங்கள் பெரும்பாலும் அப்புத்தளைப் பிரதேச மக்களால் வழிபடப்படும் சிறுதெய்வங்களாகும்.

சிறுதெய்வம் உயிருள்ள மனிதனுக்கு சமமானது. அது மனிதனைப் போல் உண்டும், குடித்தும், உறங்கியும், தன்னைப் பேணும் மனிதனை பாதுகாத்தும், கொடிய பகைவனாகி அவர்களை அழித்தும் விடுகின்றது என்பது இவர்களின் நம்பிக்கை. இவ்வழிபாடு சாதி அடிப்படையிலும் தொழில் அடிப்படையிலும் இடம் பெறுகின்றது. சிறுதெய்வ வழிபாடானது சமூகத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை புலப்படுத்துவனவாக விளங்கிய போதும் ஒரே தொழிலை புரிவோரையும், உறவினர்களையும் சமூகத்தினையும் ஒன்றிணைக்கவும் மக்களது வாழ்வில் பற்றுதலையும் நம்பிக்கையையும் மன அமைதியையும் ஏற்படுத்தவும் உதவுகிறது.

**திறவுச் சொற்கள் (keywords):** சிறுதெய்வங்கள், வழிபாடு, சமூக ஒன்றிணைப்பு

# இந்து மதத்தில் பெண்தெய்வ வழிபாடு: யாழ்ப்பாணம் - வலிகாமம் மேற்குப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு


**Supervisor**
*Miss. S. Selvakumari,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. Y. Ketheeeswary,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இந்து சமயம் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் அறுவகைச் சமயநெறிகளையுடையது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் கடவுளரைத் தலைமைத்தெய்வமாக கொள்ளும் கோட்பாட்டிற்கு அமைய சாக்த சமயம் சக்தியைப் பரம்பொருளாகக் கொண்டது. சக்தியானவள் பல நாமங்களையும், வடிவங்களையும் பெறும் போது பல பெண் தெய்வங்களாக வழிபடப்படுகிறாள். சக்தியினுடைய தோற்ற வெளிப்பாடுகள் ஏனைய தெய்வங்களின் வடிவங்களை விடக் கூடுதலாக உள்ளன. இதனால் பல்வேறு தேவைகட்கு ஏற்பவும் ஆன்மாக்களுக்கு நல்லறிவு புகட்டவும் ஆட்கொள்ளவும் பல்வேறு தோற்றப்பாடுகள் கொண்டு பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்தந்தப் பெயர்களுக்கேற்ப ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் யாழ்மாவட்ட யாழ்நகரத்தின் வடக்கு நோக்கி உள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண் தெய்வ வழிபாடு பற்றி இவ்வாய்வு ஆராய்கின்றது. இவ்வகையில், இந்து மதத்தில் பெண் தெய்வங்களினுடைய முக்கியத்துவம் பற்றியும், வணக்க முறையின் சிறப்புப் பற்றியும், இந்து சமூகத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய வகிபங்கு பற்றியும் இவ்வாய்வு சிறப்பான பார்வையைச் செலுத்துகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. இந்துமத பெண் தெய்வங்களை அடையாளப்படுத்தி ஒரே ஒரு சக்தி பல பெண் கடவுளராக பரிணமிக்கும் தன்மையை எடுத்துக் கூறுதல்.
2. யாழ் மாவட்டத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய சிறப்பினை எடுத்துக் கூறுதல்.
3. யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பெண்தெய்வ வழிபாட்டினுடைய முக்கியத்துவத்தினை வெளிக்கொணருதல்.
4. ஆண், பெண் சமத்துவமே சக்தி வழிபாட்டின் தாற்பரியம் என்பதனை ஆய்வின் ஊடாக சமூகத்துக்கு வெளிக்காட்டுதல்

சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு சமூகப்பிணக்குகளை இல்லாமற் செய்யும் வழிபாடாகப் பெண்தெய்வ வழிபாடு காணப்படுகிறது. ஆனால், இவ்வழிபாட்டினுடைய முக்கியத்துவம் சமூகத்துக்கு வெளிக்கொணரப்படாது காணப்படுகிறன்றது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

'புராதன வழிபாடாகிய பெண் தெய்வவழிபாடு யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேச மக்களின் அன்றாட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது' என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு முறையியலில் தகவல் சேகரிப்பு, தரவுப் பகுப்பாய்வு, எனும் இரு விடயங்கள் உள்ளடக்கப்படும். தரவுகள் முதலாம் நிலைத் தரவுகளாகவும், இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் காணப்படும். நேர்காணல், வினாக்கொத்து மற்றும் களஆய்வில் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகள் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், குறித்த ஆலயங்களில் பெறப்படும் அறிக்கைகள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படும். ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளாக வகைப்படுத்தப்பட்டு வரலாற்று ஆய்வு, ஒப்பியல் ஆய்வு என்பவற்றின் மூலம் சமர்ப்பிக்கப்படும்.

இந்துமதத்தில் பெண்தெய்வ வழிபாடு மிகவும் இன்றியமையாத ஓர் இடத்தினைப் பெறுகின்றது. ஈழத்தின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைநகராக விளங்கும் யாழ்நகரத்தின் வடக்கு நோக்கி உள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில் சைவசமயப் பாரம்பரியமும் கலாசாரமும் தெய்வ வழிபாடும் பக்திப் பரவசமாக விளங்கும் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல பெண் தெய்வங்களுக்கான ஆலயங்களாகும். இப்பிரதேசத்தில் வேதாகம முறைகளைப் பின்பற்றி கிரியைகள், விழாக்கள் நடைபெறும் பெரிய ஆலயங்களும், ஆகம முறைகளை முழுமையாகப் பின்பற்றாது வழிபடும் ஆலயங்களும், மரங்கள் வயல்கள் மத்தியில் உள்ள சிறிய ஆலயங்களும் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் முத்துமாரியம்மன், காளிஅம்மன், பேச்சியம்மன், மீனாட்சியம்மன், நாகம்மாள், நாச்சிமார், கண்ணகையம்மன், மனோன்மணியம்மன், மாரியம்மன், துர்க்கையம்மன், புவனேஸ்வரியம்மன், இராஜேஸ்வரியம்மன், வள்ளியம்மன் ஆகிய பெண் தெய்வங்களுக்கான ஆலயங்கள் பல காணப்படுகின்றன. 1992 இல் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக மக்கள் தமது அசையும் அசையாச் சொத்துக்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்ட போது பெண்தெய்வ வழிபாடு இங்கு ஸ்தம்பித்த நிலையை அடைந்தது. எனினும் 1996, 1997 களின் பின்னர் மக்கள் மீளக் குடியேறியதன் பயனாக பெண்தெய்வ வழிபாடும் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஒரு உன்னத நிலையினை அடைந்துள்ளது. இத்தெய்வங்களுக்கான வழிபாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பெண் தெய்வங்களோடு தொடர்புடைய விரதங்கள், விழாக்கள் என்பன இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்துக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி அகிலமனைத்துக்கும் தாயான பெண்ணைத் தெய்வமாக வழிபடுவதன் மூலம் இந்துமதத்தில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தினை அறியலாம். இப்பிரதேசத்தில் ஆண்தெய்வங்களுக்கு இணையாக பெண்தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர். இதனூடாக ஆண், பெண் சமத்துவ நிலை பேணப்படுவதோடு பெண்ணடிமைத்தனமும் நீக்கப்படுகின்றது.

இவ்வாறான பெண்தெய்வ வழிபாடானது மக்கள் மத்தியிலுள்ள பிணக்குகளை இல்லாமற்செய்வதோடு சமூக ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்துகின்றது. அதாவது பெண்தெய்வ ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியைகள், விழாக்கள், விரதங்கள் மற்றும் சடங்குகள் என்பன இந்துக்களிடமுள்ள பிரச்சினைகளை களைவதற்கு வழிவகுக்கின்றது. ஆலயங்களில் மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி வழிபாட்டில் ஈடுபடுகின்ற போதும், வேலைகளை பகிர்ந்து கொள்ளும் போதும், ஒன்றாகக்கூடி உணவுண்ணும் போதும் தம்மிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து செயற்படுகின்றனர். அப்போது அவர்களிடமுள்ள பிரச்சினைகள் இல்லாதொழிகின்றன. உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன. மேலும் திருவிழாக்காலங்களில் பெண்களுக்கு சமுகத்திலுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு

சுதந்திரமாக வழிபாட்டில் ஈடுபட வழிவகுக்கின்றது. அதுமட்டுமன்றி இவ்வழிபாட்டின் போது மக்கள் ஏற்றத்தாழ்வின்றி செயற்படுவதனால் சாதி வேறுபாடுகள் களையப்படுகின்றன. ஆலய உற்சவங்களின் போது இந்துக்கள் மத்தியில் உளத்தூய்மை, உடற்தூய்மை என்பன ஏற்படுவது மட்டுமன்றி வீடுகள், சமூகம் என்பனவும் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

எனவே சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ள பெண்தெய்வ வழிபாடானது ஆண், பெண் சமத்துவத்தினை ஏற்படுத்துவதோடு சமூக ஒருமைப்பாட்டினையும் இந்துசமய வழிபாட்டின் மரபினை பேணுதலையும் புரிகின்றது. இதனை வலிமேற்குப் பிரதேசத்து பெண்தெய்வ ஆலயங்களில் கண்டு கொள்ளலாம்.

**"பட்டினத்தார் பாடல்களினுடாக வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனைகள்"**


**Supervisor**
*Mr. N. Subaraj & Miss. S. Selvakumari ,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. E. Suganya,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


**ஆய்வுச் சுருக்கம்**


இந்தமதச் சித்தர்களில் ஒருவராக அறியப்படுபவர் பட்டினத்தடிகள். இவரது இலக்கியங்கள் தமிழறிஞர்களால் போற்றப்படுவனவாக சிறந்த இலக்கிய நயமும் மனித வாழ்வியலுக்குத் தேவையான சிந்தனைகளையும் கொண்டுள்ளனவாக உள்ளன. பட்டினத்தார் என்ற பெயருடன் மூவர் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. பதினொராந் திருமுறையில் கண்ட பாடல்களை அருளியவர் ஒருவர். இவர் அருளிய பாடல்கள் 200. இவரது காலம் 10ஆம் நூற்றாண்டாகும். அடுத்தவர் இடைக்காலப் பட்டினத்தார். இவர் அருளிய பாடல்கள் 203. இவரது காலம் 14 ஆம் நூற்றாண்டாகும். அடுத்தவர் பிற்காலப் பட்டினத்தார். இவர் அருளிய பாடல்கள் 246. இவை பதினெண் சித்தர் ஞானக் கோவை என்ற திரட்டு நூலில் சிவவாக்கியார் பாடலை அடுத்து விளங்குவதைக் காணலாம். இவ்வாறு பட்டினத்தார் மூவராகக் காணப்பட்டாலும் இவர்கள் மூவரும் ஒருவரே என்னும் வகையில் இவர்கள் மூவரது பாடல்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

பிரபல்யமான ஒரு நபரின் பெயரை பயன்படுத்துவதன் மூலம் தமக்கும் தமது இலக்கியங்களுக்கும் அங்கீகாரம் கிடைக்கும் என்பதனால் பிற்காலத்தில் பட்டினத்தடிகளின் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது பற்றிய ஆய்வு தொடர்ந்த வண்ணமே உள்ளது. உண்மையில் இவரது பெயரில் உள்ள பாடல்கள் அனைத்தும் மனித வாழ்விற்கான நீதிச் சிந்தனைகளையும் சமய வாழ்விற்கான நெறிமுறைகளையும் கூறுபனவாகவே உள்ளன. இதனால் இவ்வனைத்துப் பாடல்களுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு விளங்கும் பட்டினத்தாரின் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் வாழ்வியற் சிந்தனை பற்றி ஆராய்கின்ற ஓர் ஆய்வாக இது அமைகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. பட்டினத்தடிகள் பற்றியும் அவரது இலக்கியங்கள் சமூகத்துக்கு கூறும் வாழ்வியற் சிந்தனைகள் பற்றியும் வெளிப்படுத்துதல்.
2. பட்டினத்தார் பாடல்கள் வெளிப்படுத்தும் வாழ்வியற் சிந்தனைகள் தற்கால சமுகத்திற்கு எத்துணை அவசியமாகின்றது என்பதனை ஆராய்தல்

இந்துமதம் சார் தமிழிலக்கியங்களில் பட்டினத்தடிகளின் பாடல்கள் பல்வேறு பரிமாணங்களுடாக இந்து மக்களின் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துபவன. என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். 'மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ள வேண்டிய நெறிகளையும் ஒழுக்கச் சிந்தனைகளையும் தெளிவுபட பட்டினத்தாரின் பாடல்களில் காணலாம்' என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

பட்டினத்தார் பாடல்களினூடாக வெளிப்படும் வாழ்வியற் சிந்தனைகளை இன்றைய சமுதாய சீர்திருத்த சிந்தனைகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதற்கு் ஒப்பியல் ஆய்வு பயன்படுத்தப்படும். மற்றும் இலக்கிய ஆய்வாகவும் இது அமைகின்றது.

இவ்வாய்வுக்கு பட்டினத்தாரால் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் பிரதான மூலங்களாக அமையும். பட்டினத்தார் பாடல்கள் தொடர்பான நூல்கள் சஞ்சிகைகள் கட்டுரைகள் வெளியீடுகள் ஆய்வுக் கட்டுரைகள் இணையத்தள கட்டுரைக் குறிப்புகள் என்பன ஆய்வின் உப மூலங்களாக பயன்படுத்த உள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்திலே சிவநேசர், ஞானக்கலம்பை ஆகிய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் பட்டினத்தடிகள். இவரது பிள்ளைத் திருநாமம் திருவெண்காடர் என்பதாகும். ‘பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு’ சரிதத்தின்படி சிவபெருமானின் ஆணைப்படி குபேரனே பட்டினத்தாராக அவதரித்தான் என்பர். இளமையிலே தந்தையாரை இழந்த இவரது கனவிலே ஒரு நாள் சிவபெருமான் தோன்றி திருவெண்காடு செல்லுமாறு ஆற்றுப்படுத்தி ஓர் அந்தணராகி வந்து தாமே அவருக்குத் தீட்சை செய்தருளி வழிபாட்டிற்காக லிங்கம் வழங்கியுதவினார். சிவபூசை மகேசுவரபூசைகள் செய்ததினாலேயே பொருளிழந்த பட்டினத்தாருக்குச் சிவன் கனவிலே தோன்றி அவரது இல்லம் முழுவதும் செல்வம் வழங்கினார். பின் தமது பூசைகளைத் தொடர்ந்த படியே காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பிய பட்டினத்தார் பதினாறு வயதில் சிதம்பரச் செட்டியார் சிவகாமியம்மை தம்பதியினரின் புதல்வியாரான சிவகலை என்பவளைத் திருமணம் செய்து சிவத்தொண்டை தொடர்ந்து மேற்கொண்டார் என்பது அவர் பற்றிய சுருக்க வரலாறு.

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய ஐந்து பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

1. கோயில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக் கோவை
3. திருவிடை மருதூர் மும்மணிக் கோவை
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப..்.து போன்றவை அவையாகும்.

இவையன்றி வேறுபல சிற்றிலக்கியங்களும் தனிப்பாடல்களும் பட்டினத்தார் அருளியனவாக கருதப்படுகின்றன. அவைகூட இலக்கிய வளமும் இலக்கண அமைதியும் பக்திச் சுவையும் அனுபவச் செறிவும் நிரம்பியவையே. அப் பாடல்கள் யாவும் “பட்டினத்தார் பாடல் திரட்டு” என்ற பெயரில் பலரால் உரையோடு அச்சிடப் பெற்றுள்ளன.

இந்துமத இலக்கியங்களில் பட்டினத்தடிகளின் பாடல்களுக்கென தனித்துவமான இடமுண்டு. கற்றார் கல்லாதவர் யாவரும் விரும்பும் இலக்கியங்களுள் பட்டினத்தார் பாடல்களும் ஒரு வகை. இவை கவிதை நயமும் தத்துவச் செறிவும் சமய உண்மைகளும் நிரம்பியவை. கருத்து வளமும் அனுபவ முதிர்ச்சியும் கொண்டதோடு நிரம்பிய எளிமையும் இனிமையும் உடையவை. எனவே கற்பவர் உள்ளத்தை தொட்டு உணர்வைத் தட்டி எழுப்புவனவாய் இவை மிளிர்கின்றன. வேறெந்தப் பாடல்களையும் விடப் பட்டினத்தார் பாடல்கள் சாதாரண மக்களையும் கவர்ந்துள்ளன. நிறைவான வாழ்வியற் சிந்தனைகள் உடைய பாடல்களாகத் திகழ்வதோடு சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடியனவாக இவை உள்ளன.

**திறவுச் சொற்கள் (keywords):** பட்டினத்தடிகள், பாடல்கள், வாழ்வியற் சிந்தனைகள்

**"வவுனியாவாழ் இந்துக்களும் மீள்குடியேற்றமும்"**

**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. G. Shalini,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

இந்துக்கள் எனும் பதம் இந்துபண்பாட்டம்சங்களைப் பின்பற்றிவாழும் மக்கள் கூட்டத்தினைக் குறிக்கும். அந்தவகையில், பண்பாடு என்பது 'அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிறதிறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் என எட்வர்ட் பர்னட் டைலர் கூறுகின்றார்.[1] மேலும் பண்பாடு குறித்துப் பார்க்கின்ற போது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடிப்படையாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமாணங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும்'. ஒரு கூட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமைகள், உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.[2] எனப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இந்துப் பண்பாட்டம்சங்களை பண்டைக் காலந்தொட்டே இந்திய மக்களைப் போல் இலங்கை மக்களின் ஒரு தொகுதியினரும் கடைப்பிடித்து வருகின்றனர். அந்தவகையில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் குறிப்புப்படி இலங்கையில் நிலவும் சமய நெறிகளில் சைவம் மிகப் புராதனமானதாகும் என்று கொள்வதற்கு மகாவம்சம் ஆதாரமாய் அமைகின்றது. சைவம், வைணவம் ஆகியவற்றைப் பின்பற்றியமக்கள் இலங்கையின் பலபாகங்களிலும் பரந்து வாழ்ந்தனர் என்பதைத் தொல்பொருட் சான்றுகள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இலங்கையின் மிகப் பழைய சாசனங்களாகிய பிராமிச் சாசனங்களில் இந்துசமயச் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் சொற்களும் பெயர்களும் பிராகிருத மொழிவடிவிலே பொறிக்கும் வழக்கம் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலம் முதலாக நிலவிவந்துள்ளமை அண்மைக்கால ஆராய்ச்சிகளினாற் தெளிவாகியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.[3] மேலும் தென்னிந்தியப் படையெடுப்புக்கள், இந்துமக்களின் குடியேற்றங்கள் காரணமாகவும் இந்துப் பண்பாட்டம்சங்கள் மென்மேலும் இலங்கையில் வளர்ச்சிகண்டன.

இலங்கையின் பல பாகங்களிலும் இந்துமதம் நிலைபெற்றிருந்த போதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறப்படைந்திருந்தது. இலங்கையின் வடபகுதியை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இந்து சமயம் உன்னத நிலையில் காணப்பட்டது. இத்தகைய வடபகுதியில் உள்ளடங்கும் மாவட்டமாகக் காணப்படும் வவுனியா மாவட்டத்திலும் இந்துசமயம் சிறப்படைந்திருந்தது. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைகள் இன்றைய வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களை அடக்கியனவாயிருந்தன. அங்கு வாழ்ந்த மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் சைவராய் இருந்தனர் என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.[4] மேலும் வன்னி அரசர்களால் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட சிறப்பு வாய்ந்த இடமாகவும் காணப்படுகின்றது.

---

[1] பக்தவத்சலபாரதி, (2003),**பண்பாட்டுமானிடவியல்**, ப.152.

[2] கார்த்திகேசுசிவத்தம்பி, (1994),**தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீழ் கண்டுபிடிப்பும்**, ப.4.

[3] பத்மநாதன்,சி., (2005),**இலங்கையில் இந்துசமயம், ப.3.**

[4] பத்மநாதன்,சி., (2004),**ஈழத்து இலக்கியமும் வரலாறும், ப.312.**

இந்துப் பண்பாட்டம்சங்கள் சிறந்து விளங்கிய வவுனியா மாவட்டத்தின் வடக்கு வலயத்தில் உள்ள இந்துக்கள் பல ஆண்டுகளாக போர்ச் சூழல் காரணமாக பாதிப்பிற்கு ஆளாகி வந்தனர். இதன் காரணமாக தமது இருப்பிடங்களையும் உறவுகளையும் உடைமைகளையும் இழந்த நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் வசித்துப் பல இன்னல்களை அனுபவித்துத் தற்போது மீழ்குடியேற்றச் செயற்பாடுகளுக்கு ஆளாகிவருகின்றனர். இந்நிலையில் இவ் இந்து சமுதாயத்தினர் தாம் கடைப்பிடித்து வந்த இந்துப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான சூழல் இவர்களுக்கு அமையவில்லை.

யுத்தம் காரணமாக இவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களால் மனஅழுத்தங்களாலும் விரக்தி நிலையினாலும் தமது அன்றாடத் தேவைகளையே சரிவரப் பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் தமது இந்து பண்பாட்டம்சங்களை கடைப்பிடிப்பதில் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையின் இந்துப் பண்பாட்டம்சங்களை சிறப்பான முறையில் பின்பற்றிவந்த பிரதேசங்களில் ஒன்றான வவுனியாவின் வடக்குப் பிரதேசம் மீள்குடியேற்றச் செயற்பாடுகளின் பின்னர் இந்துப் பண்பாட்டினைப் பின்பற்றுதல் தொடர்பான விடயங்களில் நலிவடைந்த நிலையில் உள்ளது. ஆகவே இப்பகுதியில் இந்துப் பண்பாட்டம்சங்களின் நிலைப்பாடு குறித்து அறிவதோடு அவற்றினை இந்து சமுதாயத்தினர் கடைப்பிடிப்பதில் ஏற்பட்டுள்ள சவால்களை இனம் காண்பதாகவே இவ்வாய்வானது அமைகின்றது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது

1. வவுனியா வடக்குப் பிரதேசத்தில் இந்துப் பண்பாட்டம்சங்களை இனம் காணல்.
2. இடப்பெயர்வுகளாலும் இடைத்தங்கல் முகாம்களின் உருவாக்கத்தாலும் நலிவடைந்துள்ள இந்துப் பண்பாட்டம்சங்களை இனம்காணல்.
3. மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் இந்துப் பண்பாட்டம்சங்களைக் கடைப்பிடிப்பதில் ஏற்பட்டுள்ள சவால்களை இனம் காணல்.
4. மீள்குடியேற்றத்திற்குப் பின்னரான இந்துசமுதாயத்தைக் மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளின் தன்மைகள் பற்றி இனம் காணல்.
5. இந்துப் பண்பாட்டம்சங்களைப் வளர்த்தெடுத்தல் தொடர்பில் ஆய்வுப் பிரதேச மக்களின் நிலைப்பாட்டினைஅறிதல்.

வவுனியாவில் இந்துப் பண்பாட்டம்சங்களைப் பின்பற்றி வாழும் மக்கள் அதிகளவில் வாழ்வதோடு இவர்கள் தமது இந்துப் பண்பாட்டம்சங்களை பல ஆண்டுகாலமாக பின்பற்றிவருகின்றனர். அந்தவகையில் வவுனியா வடக்கு வலயத்தினை உள்ளடக்கியதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது. எனவே, வவனியா வடக்கு வலயமே இவ்வாய்வின் எல்லையாக அமைகின்றது. அந்தவகையில் வவுனியா மாவட்டமானது வடக்கில் முல்லைதீவு மாவட்டத்தினையும் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தினையும் தெற்கில் அனுராதபுர மாவட்டத்தினையும் மேற்கில் மன்னார் மாவட்டத்தினையும் கொண்டமைந்துள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தின் வடக்கு வலயம் வடக்கிலும் மேற்கிலும் முல்லைத்தீவு மாவட்டத்தினையும் கிழக்கிலே திருகோணமலை மாவட்டத்தினையும் தெற்கில் வவுனியா வலயத்தினையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது.

இவ்வாய்வானது யுத்தம் காரணமாகத் தம் உறவுகளையும் உடைமைகளையும் இழந்ததன் காரணமாக மக்கள் மனங்களில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்துக்கள் தமது பண்பாட்டம்சங்களைக் கடைப்பிடிப்பதில் விரக்திநிலை, ஆர்வமின்மை என்பன ஏற்பட்டுள்ளன, ஆய்வுப் பிரதேசத்தில் தரவுகளைச் சேகரிக்கும் போதுமக்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் வெளிப்படைத் தன்மை இன்மையால் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் எதிர் நோக்கப்பட்டது போன்றவை இவ்வாய்வுப் பிரச்சினையாகும்.

இவ்வாய்வு கள ஆய்வாக அமைகின்றது. இதற்கு இலத்திரனியல் கருவிகளும் துணைக் கொள்ளப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுப் பகுப்பாய்வானது சமூகவிஞ்ஞான ஆய்வுகளுக்கான புள்ளிவிபர பகுப்பாய்வு மென்பொருளைத் (S.P.S.S package) துணைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுமுறையியல் மூலப்பொருட்களைக் கொண்டு அறிவியல் சோதனைகள் செய்து புதிய உண்மைகளைத் தருவனவாகவும், களப்பணியில் தரவுகள் சேகரித்து, இனம் வகுத்து, பொது உண்மைகளைத் தருவனவாகவும் பலவகைப்படும். இவற்றுள் எனது ஆய்வானது கள ஆய்வை மையப்படுத்தியதாகவே இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வின் போது பேட்டிமுறை, கலந்துரையாடல், வினாக்கொத்து முறை மூலம் பெற்றதகவல்கள் மட்டுமன்றி ஆய்வுப் பரப்பில் ஆய்வாளனால் பங்கேற்று உற்றுநோக்குதல் மூலமும் தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகள் இலத்திரனியல் கருவிகள் துணைக்கொண்டு ஒலி, ஒளிப் பதிவுகள் மூலம் பெறப்பட்டன. இவ்வகையில் பெறப்பட்ட அனைத்துத் தரவுகளையும் ஒழுங்கமைத்துப் பகுப்பாய்வு செய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இடப்பெயர்வுகள், மீள்குடியேற்றம், இந்து கலாசார பண்பாடு தொடர்பாக வெளிவந்த சஞ்சிகைகள், கட்டுரைகள், நூல்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## இந்து வாழ்வியற் சடங்குளில் உளவியல்

**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. N. Reeha,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்திய மனிதன் இயற்கையினையே கடவுளாக வழிபட்டான். இயற்கையில் நடைபெற்ற சில தன்னிச்சையான செயற்பாடுகள் மனிதனை மிரள வைத்தன. அவற்றைக் கண்டு வியந்த மனிதன் அவற்றினை வணங்குவதன் மூலம் தனக்கு நன்மை கிடைக்கும் என நம்பினான். அந்த நம்பிக்கையின் வாயிலாக புனிதத் தன்மையோடு கூடிய சில செயற்பாடுகளில் ஈடுபட்டான். இச்செயற்பாடுகளே காலப்போக்கில் சடங்குகளாக உருவெடுத்தன. இறைநம்பிக்கை அச்சஉணர்வு தொழில்களில் நன்மையடைதல் போன்ற காரணங்களுக்காகச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'இயற்கையிடமும் மரணத்திற்குப் பின் வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்' என்கிறார் சிக்மன் பிராய்டு (Sigmund Fraud)[5].

மனித வாழ்வானது காலவோட்டத்தோடு இணைந்த பிறப்பு-இறப்பு-பிறப்பு சுழற்சித்தன்மை கொண்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இளமை, பருவமடைதல், முதுமை என்னும் வரிசையில் நிலைமாற்றங்கள் ஏற்படுகின்றன. உயிரியல் தளத்தில் ஏற்படும் இந்த நிலைமாற்றங்கள் இணைநிலையாக சமூக பண்பாட்டுத்தளத்தில் சடங்குகள் வழி வெளிப்படுகின்றன. மேலும், கூறுவதானால் உயிரியல் தளத்தைக் காட்டிலும் பண்பாட்டுத்தளத்தில் வாழ்வின் நிலைமாற்றங்கள் மேலும் நுண்மையாக்கம் பெற்றுப் பல்கிப் பெருகிவிடுகின்றன. ஒவ்வொரு நிலைமாற்றமும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு வயப்படுகின்றன அல்லது சடங்குவயப்படுகின்றன[6].

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சமூகவாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கம் என சடங்கினைக் குறிப்பிடலாம். தன்வாழ்க்கைப் பேரில் இயற்கை சக்திகளையும் பருவகால மாற்றங்களையும் தன்வயப்படுத்த மனிதன் கையாண்ட சில நடைமுறைகளே சடங்குகளாயின[7]. பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறிவியற்கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் பொழுது அவை சடங்காக மாறுகின்றன.

சடங்குகள் நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளைக் கொண்டு அவற்றின் தன்மைகள் வேறுபடுகின்றன. பொதுவாக செயல் சார்ந்தது, நிகழ்த்துதல் சார்ந்தது, தன்னார்வம் (நனவு) சார்ந்தது, கருவிசாராதது (பகுத்தறிவற்றது), பொழுதுபோக்குத் தன்மை கொண்டதன்று, கூட்டுத்தன்மை வாய்ந்தது, சமூக உறவுகளை வெளிப்படுத்துபவை, புனைவிற்குரியது, முனைப்பான குறியீடுகள், உறைந்த குறியீடுகள், புனிதத்துடன் தொடர்புடையது என்ற பொது இயல்புகளைக் கொண்டுள்ளன[8].

சடங்கானது வாழ்வியற் சடங்கு, வழிபாட்டுச் சடங்கு, வளமைச் சடங்கு, மந்திரச் சடங்கு என நான்கு வகைப்படுகின்றது. அந்தவகையில், மட்டக்களப்பு ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாடுகளுடன் சடங்கு பின்னிப்பிணைந்துள்ளது. மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச

---

[5] சக்திவேல்,சு., (1996), **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப.224.
[6] பக்தவத்சலபாரதி, (2008), **தமிழர் மானிடவியல்**, ப. 183.
[7] மௌனகுரு,சி., (1988), 'சடங்கிலிருந்து நாடகம்வரை', **Kilas,** ப.175.
[8] பக்தவச்சலபாரதி, (2008), மு.கு.நூ, ப.183-195.

வாழ்வியற் சடங்குகள் தொடர்பாக அறிந்து விளக்குதல் இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

உளவியல் (psychology) என்பது உள்ளத்தைக் குறித்த அறிவியலாகும். மனிதன் தன்னைத்தான் புரிந்துகொள்கின்ற நிலைப்பாட்டின் ஆரம்பமே உளவியலின் தோற்றத்திற்கு அத்திவாரமானது. 'மனிதனைப் பற்றிய உண்மைகளை விளக்கும் அறிவியல் துறைகளில் ஒன்றே உளவியல்' என John Dewey என்பவர் குறிப்பிடுகிறார்[9]. உளவியல் சார்ந்த அறிவியல் வரலாற்று நிகழ்வுகளையும் சமூகச் செயல்களையும் இலக்கியப் படைப்புக்களையும் ஆராயும் அறிவு இன்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

அந்தவகையில், மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச மக்களின் வாழ்வியற் சடங்குகளில் உள்ளார்ந்தமாக உள்ள உளவியற் கூறுகளை இனங்கண்டு அவை தொடர்பான மதிப்பீடுகள், கோட்பாட்டு, அணுமுறைகள் அனைத்தையும் முறைப்படுத்தி இந்து வாழ்வியற் சடங்குகள் வெறுமனே ஆற்றுகையாக மட்டுமல்லாமல் அறிவியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நிறுவும் ஒரு முயற்சியாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. சடங்கு என்பது ஐதீகங்கள், நம்பிக்கைகள் என்பவற்றினால் கட்டியெழுப்பப்பட்டது என்பது கடந்தகாலப் புரிதலாகக் காணப்படுகின்றது. அவை பற்றிய இப்போது தேவைப்படும் புதிய உற்று நோக்கல்கள் தொடர்பான கோட்பாட்டு அணுகுமுறைகளை மதிப்பீடு செய்தல், இந்துக்களின் சடங்குமுறைகள், மந்திரங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் உளவியல் சார்தவை என்பதைக் கண்டறிதல், இந்து வாழ்வியற் சடங்குகள் வெறுமனே ஆற்றுகையாகவும், சமய நடைமுறைகளாகவும் இல்லாமல் அறிவியல் சார்ந்த விடயங்ளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நிறுவுதல், மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச இந்துக்களின் வாழ்வியற் சடங்குகளை இனங்கண்டு அவற்றில் உள்ள உளவியற் கூறுகளை இனங்காணல்,இன்றைய நாகரிகம், தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக மறைந்துவரும் மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச இந்துக்களின் வாழ்வியற் சடங்குகள், மாந்திரீகம் என்பவற்றையும் அவற்றில் உள்ள உளவியற் கூறுகளையும் வெளிக்கொணர்தல்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கன்னன்குடாப் பிரதேசம் இவ்வாய்வின் எல்லையாக அமைகினறது. மட்டக்களப்பு மாவட்டம் ஏழு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மண்முனை மேற்கு நிர்வாகப் பிரிவின் கீழ் கன்னன்குடா, மண்டபத்தடி, கரைாக்கன்தீவு, கொத்தியாபுலை, இலுப்படிச்சேனை, தாண்டியடி, குறிஞ்சாமுனை, காயான்மடு, பருத்திச்சேனை போன்ற சுற்றியமைந்த கிராமங்களை உள்ளடக்கியதாக கன்னன்குடாப் பிரதேசம் காணப்படுகினறது. இப்பிரதேசத்தினை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது ஆய்வின் உண்மைத் தன்மையைப் பேணுவதல் என்பது ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளின் நம்பகத்தன்மையினைப் பொறுத்து அமைகின்றது. அந்தவகையில் ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்தல் என்பது ஒரு நுட்பமாகக் காணப்படுகின்றது. பொதுவாகத் தரவுகள் இரண்டு வடிவங்களில் பெறப்படுகின்றன.

முதலாம் நிலைத் தரவுகளாக களாய்வின் மூலம் நேரடியாகச் சென்று பார்வையிடல், கலந்துரையாடல், உற்றுநோக்குதல், பேட்டிமுறை என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக, இந்துச் சடங்குகள் மற்றும் உளவியல் கோட்பாடுகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், ஆய்விதழ்கள், கட்டுரைகள் என்பன எடுத்துக் கொள்ளப்பட்டன. மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேசத்தினை ஆய்வெல்லையாகக் கொண்டு இப்பிரதேச மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற வாழ்வியற் சடங்குகளில் உள்ளார்ந்தமாக இளையோடியுள்ள உளவியல் அம்சங்களை மையப்படுத்தியதாக அமைந்த இவ்வாய்வானது விவரண ஆய்வாகும்.

---

9 சக்திவேல்,சு., (1996), மு.கு.நூ, ப. 410.

# ‘சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்’

**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. N. Rujani,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

## ஆய்வுச் சுருக்கம்

இந்து நாகரிகத்தில் சித்தர்களுக்கு ஒரு அழுத்தமான இடம் உண்டு. காலந்தோறும் ஏற்பட்ட சிந்தனைப் பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. ஸித் என்னும் வடமொழி வேர்ச்சொல்லே ஸிது என்றாகி, ஸித்த என்னும் சொல்லாக உருமாறியது. இது எண்வகைச் சித்துக்களைக் கைகூடப் பெற்றவர்களைக் குறிக்கும். இதுவே தமிழில் சித்தர் என்றாகியது. சித்தர் பற்றியும், அவர் தம் நெறி பற்றியும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சித்தர்கள் என்றால் கைகூடுவதற்கு அரிதான எட்டு வகை சித்திகளும் கைவரப் பெற்றவர்கள், சித்தத்தை வென்றவர்கள், உடலோடு வாழ்ந்து கொண்டே வீட்டின்பம் காண்பவர்கள் என்பது பொருளாகும்.

இந்து மெய்யியல் வரலாற்றில் சித்தர்களின் சிந்தனை மரபானது தனக்கே உரித்தான பல சிறப்பியல்புகளை உள்ளடக்கியிருப்பதனைக் காணலாம். சித்தர் மெய்யியலானது தத்துவ ஆராய்ச்சி என்ற நிலையினைத் தாண்டி இந்து நாகரிகத்தின் சமூக, பண்பாட்டு, அறிவியல் கூறுகளை பல நிலைகளில் வளம்படுத்தியுள்ளமையினைக் காணலாம்.

சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு என்று தொகைப்படுத்தினாலும் அவர்கள் எண்ணிலடங்கார். அதே போல அவர்களது எண்ணங்களும் எல்லைகளுக்கு உட்பட்டன அல்ல. வரம்பு கடந்தவை. எல்லையற்ற நோக்கும், எதையும் கேள்விக்குள்ளாக்கும் இயல்பும், இகழ்ச்சிப் போக்கும் சித்தர் சிந்தனைகளில் ஒலிக்கின்றன.

உலகெங்கிலும் உள்ள மெய்யுணர்வாளர்களைப் போலன்றி, சித்தர்கள் தங்களது மெய்யுணர்வு அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு வகை உத்தியினைக் கையாண்டுள்ளனர். அந்த வகையில் சித்தர்களால் கையாளப்பட்ட உத்தியானது, சித்தர்களின் சிந்தனைகளில் மிகவும் நுட்பமானதும், முதன்மையானதும், இரகசியங்கள் நிறைந்ததுமான குறியீட்டு மொழியாகும். மேலோட்டமாகப் பார்த்தால் சொற்களின் பொருள் ஒரு வகையாக இருக்கும். ஆனால் அவற்றின் நுண்பொருள் வேறு ஒரு வகையாக இருக்கும். சில சிந்தனைகள் வேடிக்கையாகவும், முரண்பாடு நிரம்பியதாகவும் இருக்கும். அவற்றின் கருவுக்குள் ஆழ்ந்த ஞானப் பொருள் சில சொற்களுக்கு நிகண்டில் இல்லாத வேறொரு பொருள் சித்தர் சிந்தனை மரபிலே உண்டு.

சித்தர்கள் தம் சிந்தனைகளில் புரியும் மொழி, புரியாத கருத்துக்கள், பேச்சு வழக்குத் தமிழில் பேருண்மைகளை மறைத்து வைத்துள்ளனர். உதாரணமாக முப்பாழ், சாதிக்குதிரை, மாங்காய்ப்பால், தேங்காய்ப்பால் என்பன போன்ற குறியீட்டுச் சொற்கள் பல்வகை கருத்துக்களுக்கு இடமளிக்கின்றன. சித்தர்கள் கையாண்ட குறியீட்டு சொற்களுக்கு தனி அகராதியே தேவைப்படுகின்றது.

சித்தர்கள் பல்வேறு நோக்கங்களின் பொருட்டு தமது சிந்தனை மரபுகளில் குறியீட்டினைப் பயன்படுத்தியுள்ளனர். அந்தவகையில் 'சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்' இனை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

மேலும் இவ்வாய்வில் இந்து நாகரிகத்தில் சித்தர்களின் குறியீடு கொண்டுள்ள நிலைப்பாட்டினை அறியும் நோக்கிற்காக, இந்து நாகரிகத்தில் காணப்படும் குறியீடுகள் இலக்கியங்கள், சின்னங்கள், வழிபாடுகள், சடங்குகள் என்ற வகையில் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படுவதற்கு பல நோக்கங்கள் காணப்படுகின்றன. இவ்வகையில் இவ்வாய்வானது மேல்வரும் நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்படுகின்றது, இந்து நாகரிகத்தில் சித்தர்களின் குறியீடு கொண்டுள்ள நிலைப்பாட்டை கண்டறிதல், சித்தர்களின் குறியீட்டு மொழி தொடர்பான புரிதல்களை ஏற்படுத்துதல், சித்தர்கள் குறியீட்டு மொழியினை பயன்படுத்தியமைக்கான காரணங்களைக் கண்டறிதல், இந்து நாகரிகத்தில் காணப்படும் குறியீடுகளை இனங்காணல்.

சித்தர்கள் உலகெங்கிலும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் உள்ளனர். நவகோடி சித்தர்கள், சித்தர்கள் அனேகங்கோடி என்றெல்லாம் சித்தர் பாடல்கள் உள்ளன. 'சித்தர் மெய்யியல் மரபில் குறியீடுகள்' என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வானது, பதினெண் சித்தர்களை மையப்படுத்தி அமைந்துள்ளது.

ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது ஆய்வின் உண்மைத் தன்மையை பேணுவது ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளின் நம்பகத் தன்மையை பொறுத்து அமைகின்றது. அந்த வகையில் ஆய்வுகளில் தரவு சேகரித்தல் என்பது முக்கியமான ஒரு நுட்பமாகக் காணப்படுகின்றது. பொதுவாகத் தரவுகள் இரண்டு வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

முதலாம் நிலைத் தரவுகளாக பதினெண் சித்தர் பாடல்கள் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வோடு தொடர்புடையதாக இதுவரை வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், உரை நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தகவல்கள் என்பவை இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பதினெண் சித்தர் சிந்தனை மரபினை ஆய்வு எல்லையாகக் கொண்டு சித்தர் மெய்யியல் மரபில் உள்ள குறியீடுகளை மையப்படுத்தியாக அமைந்துள்ள இவ்வாய்வானது விபரண ஆய்வாகும். இவ்வாய்வின் மூன்றாவது அத்தியாயத்தில் வரலாற்றியல் முறையும் கையாளப்பட்டுள்ளது.

சித்தர்கள் இயற்கை சார்ந்த விடயங்களினை மட்டும் பேசாது, இயற்கை அதீதம் சார்ந்த விடயங்களினையும் பேசியுள்ளனர். அந்த வகையில் பௌதீகம், பௌதீக அதீதம், சாதனையியல் சார்ந்த விடயங்களினை நடைமுறை வாழ்வியலோடு ஒன்றிணைத்து கூறியுள்ளமையினைக் காணலாம். இதனை வெளிப்படுத்தி நிற்கும் தன்மையில் சித்தர்கள் குறியீட்டு மொழியினைக் கையாண்டுள்ளனர்.

# மன்முனை மேற்குப் பிரதேசத்தில் சித்தாயுர்வேத வைத்தியம்

**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. Y. Harthiyayini,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

## ஆய்வுச் சுருக்கம்

பன்னெடுங் காலமாக மக்கள் தம் வழக்கில் கொண்டுள்ள ஒருசமயத் துறையாக இந்து நாகரிகம் உள்ளது. இது அண்டவியல், இரசாயணவியல், வானியல், இயற்பியல், மருத்துவம் எனும் முறைசார் அறிவியற் புலங்களை தன்னுள்ளே கொண்டுள்ளது. அந்த வகையில் இந்து நாகரிகத்திற்கேயுரிய மருத்துவமானது இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்துக்களின் அறிவியல் வளர்ச்சியில் ஒரு பரிணாமமாக மருத்துவத்துறையும் சிறப்புற்று விளங்குகிறது. இந்து நாகரிக வரலாற்றில் பல துறைகளிலும் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பினைப் போலவே இந்து மருத்துவத் துறையிலும் ஆயுர்வேத, சித்த மருத்துவ மரபுகள் தம்முள் கொண்டும் கொடுத்தும் கலப்புற்று வளர்ச்சி பெற்றன. இதுவே தற்கால இந்து சமூகத்தினரிடையே சித்தாயுர்வேத மரபாக அறியப்படுகின்றது.

பிணியினைப் போக்குதல், ஆரோக்கியம் காத்தல், நீண்ட ஆயுளைத்தரவல்ல முறைமையால் இந்துக்களில் மருத்துவக்கலையானது காலம் காலமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்தியாவின் வடநாட்டாரின் சுதேச மருத்துவம் ஆயுர் வேதம் என்றும் தென்நாட்டாரின் சுதேச மருத்துவம் சித்த மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. சித்த மருத்துவத்தின் மூல நூல்கள் தமிழ் மொழியிலும் ஆயுர் வேதத்தின் மூல நூல்கள் சமஸ்கிருத மொழியிலும் காணப்படுகின்றன. இவ்விரு மருத்துவமும் இணைந்து சித்தாயுர்வேத மருத்துவம் என புதியதோர் பரிணாமம் பெற்றது. ஆயுர்வேதமானது வேதகாலம் முதல் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. வேதங்களில் ரிக்வேதத்தின் ஔஷத சூக்தம், சுக்கிலயசூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதத்தின் பேஷஜானி, ஆயுஷ்ஜானி சூக்தப்பகுதி, தைத்திரீய சம்ஹிதை, பிருகதாரணியத்திலும் மருத்துவ குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இதனைத்தொடர்ந்து வந்த காலப்பகுதி ஆயுர் வேதத்தின் பொற்காலப்பகுதியென சிறப்பிக்கப்படுகின்றது. ஆர்த்திரேயர், தன்வந்த்ரி, சரகர், சுஸ்ருதர், வாக்பட்டர் போன்றோரால் வைத்திய நூல்கள் இயற்றப்பட்டன. இந்நூல்களிலே எண்வகை மருத்துவ முறை பற்றிச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. பின்வந்த பல்லவர் காலப்பகுதியிலே மருத்துவத்துறையானது மன்னர்களின் ஆதரவுடன் வளர்க்கப்பட்டது. அத்துடன் நாயன்மார், ஆழ்வார்களது பாடல்களிலே மருத்துவச் சிந்தனைகள் பயில்நிலையிலும் காணப்படுகின்றது. அடுத்து வந்த சோழர்காலப்பகுதியிலேயும் மருத்துவமானது அரசர்களின் ஆதரவுடன் வளர்க்கப்பட்டது மருத்துவமனைகள் பல தமிழகத்தின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. இக்காலத்திலே தோற்றம்பெற்ற சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் மற்றும் ஏனைய இலக்கியங்களிலும் இதனைக் காணலாம்.

இதனையடுத்துவந்த காலமான விஜயநகர நாயக்கர் காலப்பகுதியிலேயே மருத்துவத்துறையானது புதுவிதமான முறையில் வளர்ச்சி பெற்றது. இக்காலப்பகுதியில் பதினெண் சித்தர்களால் சித்த மருத்துவம் வளர்க்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இவர்களால் சித்தவைத்தியம் தொடர்பான நூல்கள் உருவாக்கம் பெற்றன. இந்நூல்களிலே அட்டமா சித்திகள், ரசவாதம், மந்திரம் என்பன தொடர்பான விடயங்களும் அவற்றினூடாக

சுகவாழ்விற்குரிய நடைமுறை ஒழுங்குகள், உணவுப் பழக்கவழக்கங்கள் முதலான பல விடயங்களும் கூறப்பட்டுள்ளன. மனிதனைப் பற்றும் பிணிகள் உடற்பிணி, உயிர்ப்பிணி, பிறவிப்பிணி எனவும் மருத்துவங்களாக தேவ மருத்துவம், மனித மருத்துவம், ராட்சத மருத்துவம் எனவும் சித்தர்கள் பாகுபடுத்தி கூறியுள்ளனர்.
இவ்வாறான முறையில் சித்தாயுர்வேத மருத்துவ துறையானது இந்தியாவை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற அதேசமயம் ஈழத்திலும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. தனக்கெனத் தனியான இடம் பிடித்த சித்தாயுர்வேதமானது இந்து மதத்தினது துணை கொண்டே வளர்ச்சிபெற்று வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்குப் பிரதேசத்திலும் இந்துப் பாரம்பரியத்திற்கேயுரிய சித்தாயுர்வேதமானது இன்றும் நிலைபெற்றுள்ளது. இக்கிராமப்புறங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களையே செய்துவருகின்றனர். இங்கு கிராமப்புற வழக்காறுகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

அதாவது, கிராமப்புற மக்கள் மத்தியில் காணப்படும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், அறிவியல் மற்றும் பாரம்பரியங்கள் போன்றனவே இங்கு அதிகமாக உள்ளன. இத்தகைய நாட்டாரியல் அம்சங்கள் பொருந்தியுள்ள இப்பிரதேசத்திலே நாட்டார் அறிவியலிலே முக்கியமாகக் காணப்படுவது இத்தமிழ் மருத்துவம் ஆகும். இம்மருத்துவமானது இங்குள்ள மக்களுக்கு பெரும் பங்காற்றிவருகின்றது. இந்த மருத்துவ முறைகள் ஆய்வுப்பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் எவ்வெவ் வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்றும் மக்கள் மத்தியில் இம்மருத்துவவியல் கூறுகள் எத்தகைய முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன என்பனவற்றை ஆராய்ந்து மக்களுக்கு வெளிக்காட்டுவதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

இவ்வாய்வின் நோக்கங்களாக, இந்து நாகரிகத்துறைசார் ஆய்வு முயற்சி என்ற வகையில் மண்முனை மேற்கு பிரதேசத்தில் சித்த மருத்துவமாகவும் நாட்டுப்புற மருத்துவமாகவும் தமிழ் மருத்துவமாகவும் வெகுசன வழக்கில் அறியப்படுகின்ற சித்தாயுர்வேத மருத்துவப் பாரம்பரியத்தின் பயில் நிலைகளை இனங்கண்டு கொள்ளல், குறித்த பிரதேசத்தில் உள்ள நாட்டுப்புற மருத்துவவியல் தொடர்பிலான தகவல்களை ஆவணப்படுத்தல், ஆய்வுப் பிரதேசத்தில் மருத்துவவியல் தொடர்பான செயன்முறைகள், கையாளப்படும் விதம் என்பவற்றை இனங்காணல். இங்கு நடைமுறையிலுள்ள மருத்துவவியற் கூறுகள் புராதன இந்து மருத்துவப் பாரம்பரியத்தினது தொடர்ச்சியாக அமைந்துள்ளமையினையும் அது பேணப்பட்டு வருவதனையும் நிரூபித்தல்.

மட்டக்களப்பின் மண்முனை மேற்குப் பிரதேசத்தினை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு ஒன்றுக்கு எல்லா வகையிலும் பொருத்தமுள்ளதாக அமைவதே ஆய்வு முறையியல் ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டதாகவே ஆய்வு முறைகள் தெரிவு செய்யப்படுகின்றன, தரவு மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு தரவுகளின் வகைகள், ஆய்வுக்கான தரவுகளை சேகரிக்கும் முறை, பகுப்பாய்வு முறை மற்றும் பகுப்பாய்வு முறையின் பொருத்தப்பாடு போன்ற பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. இப்பிரதேசங்களில் அதிகளவிலே மருத்துவ முறைகள் காணப்பட்டாலும் மருத்துவவியலாளர்கள் மருத்துவ முறையில் மருந்து தயாரிக்கும் இடம், முறைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே இவ்வாய்விற்குப் பிரதேசங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்விலே ஆய்வாளரால் முதலாம் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத் தரவு எனும் இரு மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களே விளங்குகின்றன. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மருத்துவ முறைகளை மேற்கொள்ளும் கிராமிய வைத்தியர்களிடம் நேரடியாகச் சென்று பெற்ற தகவல்களும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நாட்டார் மருத்துவவியல் தொடர்பான ஏடுகளுமே முதன்மைச் சான்றுகளாக அமைந்துள்ளதுடன் இவ்வாய்வின் போது நேரடியாகச் சென்று பேட்டி முறை, உற்று நோக்குதல் முறை மூலம் பெற்ற தகவல்களும் புகைப்படங்களுமே இவ்வாய்வின் முதன்மைத் தரவுகளாக உள்ளன. இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வாளரால் பயன்படுத்தப்படுபவை இவ்வாய்விற்குத் துணை செய்யும் வகையில் காணப்படும் பத்திரிகைகள், புத்தகங்களில் வெளிவந்த கட்டுரைகள் என்பன அடங்குகின்றன.

.